**TNTT070011512026**

**நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.2, கோவில்பட்டி**

முன்னிலை: திரு.M.மணிமேகலா,M..A., M.L.,
நீதித்துறை நடுவர் எண். 2
கோவில்பட்டி.

2026 ம் ஆண்டு ஜுலை மாதம் 21-ம் நாள் செவ்வாய்கிழமை

**முதல் நிலை வழக்கு எண்.43/2026**

**கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய குற்ற எண். 95/2026**

| | | |
|---|---|---|
| அரசுக்காக, காவல் ஆய்வாளர்,<br>கோவில்பட்டி மேற்கு காவல் நிலையம். | : | குற்றமுறையிடுபவர் |
| -எதிர்- | | |
| நாராயணமூர்த்தி, வயது -43/2026<br>த/பெ. கிருஷ்ணன்,<br>66A-1, நடு தெரு,<br>கிளவிபட்டி,<br>தற்போதைய முகவரி,<br>1-4236, அன்னை தெரசா நகர்,<br>மந்திதோப்பு ரோடு,<br>கோவில்பட்டி,<br>தூத்துக்குடி மாவட்டம். | : | எதிரி |

இவ்வழக்கானது 18.02.2026-ம் தேதியன்று இந்நீதிமன்றத்தால் முதல் விசாரணை வழக்கு எண். 43/2026 ல் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அரசு தரப்பில் கற்றறிந்த அரசு குற்றத்துறை உதவி வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிரி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. கருப்பசாமி அவர்கள் ஆஜராகியும் வழக்காவணங்களை பரிசீலனை செய்து இன்று இந்நீதிமன்றம் வழங்கும்......

**உத்தரவு**

**1. அரசு தரப்பில் வழக்கின் சுருக்கம் :-**

இவ்வழக்கின் கடந்த 18.01.2026 ம் தேதி காலை 11.00 மணிக்கு கோவில்பட்டி UPMS பள்ளி அருகே வைத்து கோவில்பட்டி மேற்கு காவல்

நிலைய உதவி ஆய்வாளர் சாட்சி1 திரு.வேல்பாண்டியன் மற்றும் போலீஸ் பார்டிகளான மு.நி.கா.2113 திரு. மணிகண்டன், மு.நி.கா 1611 திரு. சிவசுப்பிரமணியன் ஆகியோர்களை பார்த்து எதிரி நாராயணமூர்த்தி ஏலே தேவடியா மவன்களா எதுக்குல என்னைய பிடிக்க வந்தீங்க என்று அசிங்கமாக பேசியும் பிடிச்சீங்கன்னா உங்களை வெட்டி கொன்னுருவேன் என்று பொதுயிடத்தில் வைத்து அசிங்கமாக பேசியும் இந்திய படைக்கல சட்டத்தின் கீழ் கொடுரமான கூர்மையான மனித உயிருக்கு ஆபத்தான 9 அங்குலத்திற்கும் அதிகமான நீளம் உள்ள 2 அங்குலத்திற்கு அதிகமான அகலம் கொண்ட ஆயுதமான பெரிய அருவாளை கையில் வைத்துகொண்டு கொலைமிரட்டல் விடுத்தும் பொது ஊழியரைத் தனது சட்டப்படியான கடமைகளை செய்யவிடாமல் தடுத்தும் கேடு விளைவிப்பதாக மிரட்டல் விடுத்து தள்ளி தாக்கிவிட்டு தப்பி ஓட முயற்சித்த குற்றத்திற்காக எதிரியின் பிரிவுகள் 296(பி), 132, 224, 351(3) BNS & 25 (1A) Arms Act 1959– ன் கீழ், தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக கோவில்பட்டி மேற்கு காவல் நிலைய ஆய்வாளர் எதிரி மீது குற்றப்பத்திரிக்கையை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரி இந்நீதிமன்றத்தில் ஆஜர் ஆனதும் அவருக்கு அரசு தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களின் நகல்கள் பிரிவு 230 BNSS–ன் கீழ் இலவசமாக வழங்கப்பட்டது.

3. இவ்வழக்கு ஆவணங்களை பரிசீலணை செய்தபோது எதிரிக்கு எதிராக பிரிவுகள் 296(பி), 132, 224, 351(3) BNS & 25 (1A) Arms Act 1959–ன் கீழ் குற்றத்திற்கு முகாந்திரம் உள்ளதாலும், மேற்படி குற்றமானது முற்றிலும் மாண்புமிகு அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரிக்ககூடிய குற்றம் என்பதாலும் இவ்வழக்கினை மேல்விசாரணைக்காக மாண்புமிகு தூத்துக்குடி மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது.

4. இந்த வழக்கில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள ஆவணங்களை பரிசீலனை செய்த பின்னர் இந்த வழக்கு மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மட்டுமே விசாரணை செய்யத்தக்கது என்பதால் இந்த வழக்கை விசாரணைக்காக பிரிவு 232(a) BNSS–ன் கீழ் தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

5. இந்த வழக்கின் பதிவுக்கட்டையும் சாட்சியத்தில் தாக்கல் செய்யப்பட வேண்டிய ஆவணங்கள் மற்றும் ஆர்.பி.எண். 26/2026 இவ்வழக்கின் சொத்துகளை பிரிவு 232(c) BNSS–ன் படி துத்துக்குடி மாண்புமிகு முதன்மை

மாவட்ட அமர்வு நீதிமன்றத்திற்கு சமர்ப்பிக்க உத்தரவிடப்படுகிறது.

6. இவ்வழக்கினை மேல் விசாரணைக்கு அனுப்பி வைக்கப்படுவது பற்றிய அறிவிப்பு மாவட்ட அரசு குற்றத்துறை வழக்கறிஞருக்கு பிரிவு 232(d) BNSS–ன் பிரிவின் கீழ் அனுப்பி வைக்க உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிரி 09.09.2026 ஆம் தேதி காலை 10.00 மணிக்கு மாண்புமிகு தூத்துக்குடி முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிடப்படுகிறது.

7. எதிரி தூத்துக்குடி மாண்புமிகு முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தில் வழக்கறிஞர் வைத்து வாதாட வசதி உள்ளது என்று கூறினார்.

இந்த உத்தரவு சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு, 2026–ஆம் ஆண்டு ஜூலை 21 –ஆம் நாள் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒப்பம்)...M. மணி மேகலா/21.07.2026
நீதித்துறை நடுவர் எண் 2,
கோவில்பட்டி.